கவனிக்க .- 2025.06.20 ஆந் திகதிய 2442 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

கவனிக்க .- இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2025 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்ட நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப் பட்டியலொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2443 - 2025 ජූනි මස 27 වැනි සිකුරාදා - 2025.06.27

2443ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 27ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 900 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 901 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 903 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, யூலை மாதம் 18ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூலை மாதம் 04ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

899 - B 82694 - 403 (2025/06)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## மேல் நீதிமன்றம் - கல்முனை

### பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

கல்முனை மேல் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2025.06.25 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கல்முனை மேல் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையான காலப்பகுதியினுள் இப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏல விற்பனையிலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் பணத்தை உடனடியாக இந் நீதிமன்றத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அப் பொருட்களை நீதிமன்ற வளாகத்தை விட்டும் உடனடியாக அப்புறப்படுத்துதல் வேண்டும். இச் சந்தர்ப்பத்தில் காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்தில் தெரிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவிதமான முறைப்பாடுகளும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளிப்பது அவசியமாகும்.

**ஏல விற்பனை செய்யப்படும் பொருட்கள் தொடர்பான விபரம் வருமாறு**

| *தொ.இல.* | *வழக்கு இல.* | *வாகனப் பதிவு இல.* | *பொருட்கள் தொடர்பான விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| 01. | EP/ HCK/ 639/ 2021 | SP - AAZ- 7937 | முச்சக்கர வண்டி (Three Wheel) | 01 |
| 02. | EP/ HCK/ 594/ 2020 | -------- | மண்வெட்டி | 01 |

ஜே.ட்ரொஸ்கி,
மேல் நீதிமன்ற நீதிபதி,
கல்முனை.

மேல் நீதிமன்றம்,
கல்முனை,
2025.06.05.

06- 197

---

## அறிவித்தல்

## மாவட்ட / நீதிவான் நீதிமன்றம் - பொத்துவில்

பொத்துவில் மாவட்ட / நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் வழக்குகளுடன் தொடர்புபட்ட வழக்குச் சான்றுப்பொருளாக முற்படுத்தப்பட்டு, இதுவரையிலும் உரிமைக்கோரிக்கை எதுவும் முன்வைக்கப்படாத கீழ் குறிப்பிடப்படும் வாகனங்களை அரசுடமையாக்கி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பில் உரிமைக்கோரிக்கைகள் எதுவுமிருப்பின், இந்த அறிவித்தல் வழங்கப்படும் தினத்திலிருந்து 02 மாத காலத்திற்குள் உரிய ஆவணங்களுடன் பொத்துவில் மாவட்ட / நீதிவான் நீதிமன்றத்தில் முன்வைக்குமாறு இத்தால் அறியத்தருகின்றேன்.

| *தொடர் இல.* | *வழக்கு இலக்கம்* | *வாகன விபரம்* |
|---|---|---|
| 01. | AR/ 8397/ 2024 | 157-0451 மோட்டார் சைக்கிள் |
| 02. | 33103/ MT/ 2023 | CP QO 5718 முச்சக்கர வண்டி |

எம்.கே.எம். ஹில்மி,
மாவட்ட/ நீதிவான்.

மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம்,
பொத்துவில்,
2025.06.13.

06- 220

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றி பொது மக்களுக்கு அறிவித்தல்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுக்கமைய கம்பனியின் பெயர் மாற்றப்பட்டு, இதனகத்துப் பின்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயரின் கீழ் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

*கம்பனியின் முந்தைய பெயர் :* வரையறுக்கப்பட்ட சர்டிஸ் லங்கா இலேக்ட்ரோனிக் செகியுரிட்டி சொலூஷன்ஸ் ( தனியார்) லிமிடெட்
*கம்பனியின் புதிய பெயர் :* வரையறுக்கப்பட்ட சிட்ரேக் இலேக்ட்ரோனிக் ( தனியார்) லிமிடெட்
*கம்பனியின் பதிவிலக்கம் :* PV63586
*கம்பனியின் பதிவு அலுவலகம்:* இல.15, டி பொன்சேக்கா வீதி, கொழும்பு 04

கார்ப்பரேட் ஆர்கேட் லிமிடெட்,
கம்பனியின் செயலாளர்கள்.

இல. 9/4,
எட்மன்ட் வீதி,
கிருலப்பனை, கொழும்பு -06.

06-186/1

---

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றி பொது மக்களுக்கு அறிவித்தல்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுக்கமைய, கம்பனியின் பெயர் மாற்றப்பட்டு, இதனகத்துப் பின்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயரின் கீழ் கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

*கம்பனியின் முந்தைய பெயர் :* வரையறுக்கப்பட்ட சிட்ரேக் எம்ப்லோயிஸ் ஷெயார் ட்ரஸ்ட் ( தனியார்) லிமிடெட்
*கம்பனியின் புதிய பெயர் :* வரையறுக்கப்பட்ட சிட்ரேக் டோட்டல் சொலுஷன்ஸ் ( தனியார்) லிமிடெட்
*கம்பனியின் பதிவிலக்கம் :* PV 77192
*கம்பனியின் பதிவு அலுவலகம்:* இல.15, டி பொன்சேக்கா வீதி, கொழும்பு 04

கார்ப்பரேட் ஆர்கேட் லிமிடெட்,
கம்பனியின் செயலாளர்கள்.

இல. 9/4,
எட்மன்ட் வீதி,
கிருலப்பனை, கொழும்பு -06.

06-186/2

---

## குறுகியகால ஒன்றிணைப்பு பற்றிய அறிவித்தல்

RSG ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) கம்பனியுடன் றைஸிங் சன் புரொப்பட்டீஸ் ( பிரைவட்)கம்பனி 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 239 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட விதிகளுக்கு ஏற்ப டெம்பிள் ஒழுங்கை, கொழும்பு - 03 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ள RSG ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) கம்பனியுடன் பதிவு இலக்கம் PV 7750 உடைய இலக்கம் 36, டெம்பிள் ஒழுங்கை, கொழும்பு 03 கம்பனியை ஒன்றிணைப்பதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது பற்றி இத்தால் பொதுமக்களுக்கு அறிவித்தல் தரப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றிணைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு நியம திகதி 2025, ஓகத்து முதலாம் திகதி அல்லது கம்பனிகள் பதிவாளரால் ஒன்றிணைப்பு சான்றிதழ் வழங்கும் திகதி நடைமுறைப்படுத்தும் திகதியாக கருதப்படும். இரண்டு

கம்பனிகளினதும் பணிப்பாளர்கள் சபைகளும் கருதியுள்ளது. இந்த ஒன்றிணைப்பு இரண்டு கம்பனிகளுக்கும் நன்மையானது என்பதாகும். கம்பனிகளின் ஒன்றிணைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டவுடன் நிதி உறுதிப்பாடு பற்றி ஆய்வு மூலம் உறுதிப்படுத்தப்படும் என்பதில் பணிப்பாளர்கள் சபை திருப்பதியடைந்துள்ளது.

கம்பனியின் எந்தவொரு பங்கு உரிமையாளருக்கோ அல்லது கடன் உரிமையாளருக்கோ ஒன்றிணைப்பு தீர்மானத்தை சோதனையிடுவதற்கு உரிமையுள்ளதுடன் அவ்வாறான பங்கு உரிமையாளர், கடன் உரிமையாளரோ ஒன்றிணைக்கப்படும் கம்பனி கடப்பாட்டின் கீழுள்ள எந்தவொரு நபரோ அதன் பிரதிகளை இலக்கம் 130, 2 ஆம் மாடி, நாவல வீதி, நாரஹேன்பிட்ட என்ற முகவரியில் அமைந்துள்ள கம்பனியின் செயலாளராகிய நெக்ஷியா கோப்பரேட் கன்சல்டன்ஸ் ( பிரைவட்) லிமிட்டெட் நிறுவனத்துக்கு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 4.30 மணி வரையான நேரத்துக்குள் கொடுப்பனவு இல்லாமல் பெற்றுக்கொள்ள முடியும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

நெக்ஷியா கோப்பரேட் கன்சல்டன்ஸ்
( பிரைவட்) கம்பனி,
செயலாளர்.

06- 191

---

## 244(3) ஆம் பிரிவுக்கு ஏற்ப பகிரங்க அறிவித்தல்

CEYLON HOSPITALS PLC., and DURDANS HEART CENTER ( PRIVATE) LIMITED உடன் ஒன்றிணைத்தல் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 242(2) ஆம் பிரிவுக்கு இணங்க பூர்த்தியான 244(1) (அ) பிரிவுக்கு ஏற்ப கம்பனி பதிவாளர் நாயகத்தால் 2025, சனவரி 01 ஆந் திகதி ஒன்றிணைந்த சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

*ஒன்றிணைந்த கம்பனியின் பெயர் :* CEYLON HOSPITALS PLC
*பதிவு முகவரி:* இல.03, அல்பிரட் பிளேஸ், கொழும்பு 03
*ஒன்றிணைந்த கம்பனி பதிவு இல. :* PQ 113

Nexia Corporate Consultants ( Private) Limited
கம்பனிச் செயலாளர்.

06- 192

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் விதிகளின் பிரகாரம் இன்ஸ்டிடியூட் ஒப் மெனேஜ்மன்ட் அன்ட் டெக்னோலஜி (பீவீடி) எல்டீடி நிறுவனம் 2025, மே 28 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் சொப்ட்லொஜிக் இன்ஸ்டிடியூட் ஒப் மெனேஜ்மன்ட் அன்ட் டெக்னோலஜி ( பீவீடி) எல்டீடி என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*நிறுவனத்தின் பழைய பெயர் :* இன்ஸ்டிடியூட் ஒப் மெனேஜ்மன்ட் அன்ட் டெக்னோலஜி (பீவீடி) எல்டீடி
*நிறுவன இலக்கம்:* PV 00327854
*பதிவு அலுவலகம்:* இல.181, கிருல வீதி, கொழும்பு 05
*நிறுவனத்தின் புதிய பெயர் :* சொப்ட்லொஜிக் இன்ஸ்டிடியூட் ஒப் மெனேஜ்மன்ட் அன்ட் டெக்னோலஜி ( பீவீடி) எல்டீடி

சொப்ட்லொஜிக் கோபரேட் சேர்விசஸ் ( பீவீடி) எல்டீடி,
செயலாளர்கள்.

இல.14,
டி பொன்சேகா பிளேஸ்,
கொழும்பு 05.

06- 187

# ஏல விற்பனைகள்

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

பகிரங்க ஏல விற்பனை

**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்**

ஒருவல கிராமம், கடுவெல என்ற இடத்தில் அமைந்துள்ள இல. 20ஏ மஹஜன மாவத்தை எனும் மதிப்பீட்டிலக்கத்தை உடைய 38 பேர்ச். பரப்புள்ள பெறுமதிமிக்க குடியிருப்பு வளாகம்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரள பல்லேபற்று கடுவெல மாநகர சபை எல்லையினுள் ஷாந்தலோககம பிரதேசசெயலக பிரிவில் ஒருவல கிராம அலுவலர் பிரிவு ஒருவல கிராமத்தில் அமைந்துள்ள, இல. 20ஏ, மஹஜன மாவத்தை எனும் மதிப்பீட்டிலக்கத்தை உடைய மரங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் சகலதும் உள்ளடங்கலான ''எரஹரலியகஹவத்த'''' என்றழைக்கப்படும் காணியின் (2018.08.19 ஆந் திகதி அன்று எல்லை உறுதிப்படுத்தப்பட்டது) உத்தரவுபெற்ற நில அளவையாளர் டி. யு. எஸ். பெர்னான்டோ அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதிய இல. 1019 B வரைபடத்தில் விபரிக்கப்பட்ட லொட் B குறிக்கப்பட்ட காணியின் பிரிவிட்டதும் வரையறுக்கப்பட்டதுமான பூமி முழுவதும்.

உபகரணங்கள், நீர் விநியோக முறை உபகரணங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் குளிரூட்டல் சாதனங்கள் உட்பட மின் விநியோக முறை உள்ளடங்கலாக மேற்குறித்த காணிப்பகுதிகளில் தற்போது அல்லது இதன் பின்னர் காலத்திற்குக் காலம் பொருத்தப்படும் அல்லது நிரந்தரமாக கட்டப்படும் அனைத்து மற்றும் ஒற்றை அசையா ஆலை மற்றும் இயந்திரங்கள், உபகரணங்கள், பொருத்துகைகள் மற்றும் சேவைகள் உள்ளடங்கலாக.

தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பாக கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி நிலாந்தி ப்ரதீபிகா செனரத் முதலி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020, திசெம்பர் 10 ஆந் திகதிய இல. 1513 பிணைக் கட்டுப்பாட்டுக்கான கட்டணத்தை (1 ஆம் கடன் பெறுநரான) வன் 9 வன் (தனியார்) லிமிட்டட் மற்றும் (இரண்டாம் கடன் பெறுநரான) கலுகமகே டோனா இந்த்ரிகா தேஷப்பிரிய சந்த்ரரத்ன என்பவர்கள் மேற்கொள்ளத் தவறியுள்ளனர். அத்துடன் குறித்த வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி மேற்குறித்த ஆதனத்தை எதிர்வரும் 2025, யூலை 28 ஆந் திகதி அன்று முற்பகல் 11.00 மணிக்கு ஸ்தலத்திலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளேன்.

**மேலதிக விபரங்களுக்கு:** 2024.03.07 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானி, 2024.01.22 ஆந் திகதிய ''தி ஐலன்ட்'', ''திவயின''மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளைப் பார்வையிடவும்.

**வளாகத்தை அணுகும் முறை**.- அதுருகிரிய நகர மத்தியிலிருந்து கடுவெல வீதி வழியாக எகொடவத்த சந்தி வரை 3.6 கி.மீ. வரை சென்று இடதுபக்கம் திரும்பி மேலுள்ள வீதியின் இடக்கை பக்கத்தில் அமைந்துள்ள குறித்த ஆதனத்தை அடைய மஹஜன மாவத்தை வழியாக 300 மீற்றர் தொடர்ச்சியாக செல்லவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.-** கொள்வனவு செய்யும் நாட்டமுள்ளவர் ஏலம் முடிவுறுத்தப்படும் தருணத்தில் பின்வரும் முறையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்;.

(1) 10 % கொள்வனவு விலை;
(2) 1 % உள்ளூரதிகார சபை கட்டணங்கள் மற்றும் அவ்வாறே வட்;
(3) 2 1/2 % ஏலமிடுபவருக்கான கட்டணம்;
(4) விளம்பரப்படுத்துவதற்கான மொத்தக் கட்டணம்;
(5) இலிகிதர் மற்றும் அறைகூவல்காரருக்கான கட்டணம் ரூபா 4,500.00 விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப் படுத்தியமைக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3,000.00 முதலியன. எஞ்சிய 90% கட்டணமானது ஏலமிட்ட நாளிலிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

ஆதன இடாப்புகள் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பரிசீலிக்க**:** மீட்டெடுத்தலுக்கான சட்ட முகாமையாளர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ , இல.40, நவம் மாவத்தை, கொழும்பு 02.

தொலைபேசி**:** 2448448, 011-7448448.

பீ.கே.ஈ. சேனாபதி ,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்,
பட்டய ஏலமிடுபவர்.

134, பெத்தகான வீதி, கோட்டை
தொலைபேசி இலக்கம் : 2873656, 0777- 672082, தொலைநகல். : 2871184.

06- 180

## யூனியன் பேங்க் ஒஃ ப் கொழும்பு பிஎல்சி

### பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம். மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் இல. 548 என்ற கல்தேமுல்ல மற்றும் இல. 548C என்ற தம்புர கிராம அலுவலர் பிரிவில், கல்தேமுல்லையில் அமைந்துள்ள அளவையாளர் உறுதிப்படுத்தப்பட்ட இல. 520213 என்ற கெடெஸ்தர் ( கடஇம்) வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட வலய இல. 02 இல் துண்டு இல. 04 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதியின் விஸ்தீரணம்: ( 0.0245 ஹெக்டயார்) விசாலமுடைய காணித்துண்டோடு. இது தெல்கந்த காணிப் பதிவு அலுவலகத்தில் இல. 00042520909 என்ற உரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம். மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் இல. 548 என்ற கல்தேமுல்ல மற்றும் இல. 548C என்ற தம்புர கிராம அலுவலர் பிரிவில், கல்தேமுல்லையில் அமைந்துள்ள அளவையாளர் உறுதிப்படுத்தப்பட்ட இல. 520213 என்ற கெடெஸ்தர் ( கடஇம்) வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட வலய இல. 02 இல் துண்டு இல. 05 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதியின் விஸ்தீரணம் ( 0.0081 ஹெக்டயார்) விசாலமுடைய காணித்துண்டோடு. இது தெல்கந்த காணிப் பதிவு அலுவலகத்தில் இல. 0004250908 என்ற உரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் மொரட்டுவ , கல்தேமுல்ல வீதி, இல. 64/ 4 மற்றும் மொரட்டுவ, கல்தேமுல்ல வீதி, இல. 82/ 4 என்ற முகவரியில் வசிக்கும் கங்கானம் கபுகே லிவின்ஸ்டன் தஹநாயக்க ( தேசிய அடையாள அட்டை இல. 711993495V என்ற) மற்றும் டெரீன் இரேஷா பீடர்ஸ் ( தேசிய அடையாள அட்டை இல. 788232136 V என்ற) (இதன் பின் " கடனாளிகள்" என அழைக்கப்படும்) அவர்களால் கம்பனி பதிவு இலக்கம் PB 676PQ உள்ள யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி ( இதன் பின்னர் "யூனியன் பாங்க் " என அழைக்கப்படும்) ஏனைய கடன் வசதிகளின் பெற்றுக் கொள்வதற்காக மேற்குறித்த கடனாளி அவர்களால் மேற்குறித்த ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட காணி சம்பந்தமாக 1998 ஆம் ஆண்டு இல. 21 உரிமை பதிவுசெய்யும் சட்டத்தின் கீழ் மற்றும் பணத்தொகையை பிரசித்த நொத்தாரிசு எம்.பி. டபிள்யூ. மலவிபதிரன அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 2018.12.27 மற்றும் 2018.12.28 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறியை எதிக் கையொப்பமிட்டு மேற்குறித்த கடன் வசதிகளினால் (இதன் பின்னர் "கடன் வசதிகள் என அழைக்கப்படும்) யூனியன் பாங்க் மூலம் அறவிடப்பட வேண்டிய மேற்குறித்த கடன்வசதிகள் மற்றும் அதன் மீதுள்ள வட்டிகள் மீள செலுத்துவதற்காக பிணையாக வைத்து, மேற்குறித்த முதலாவது ஆதன இடாப்பு மற்றும் இரண்டாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட காணியை பிணையாக வைத்துள்ளதாலும். யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி மூலம் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

மேல் சொல்லப்பட்ட காணிகளை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.
முதலாவது ஆதன இடாப்பு- 2025, யூலை மாதம் 25 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு
இரண்டாவது ஆதன இடாப்பு- 2025, யூலை மாதம் 25 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு

**காணிக்குச் செல்லும் விதம்:** ரத்மலான மெலிபன் சந்தியில் இருந்து காலி பக்கமாக 1.5கி.மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது( கொழுமடம சந்தி வரை பிரயாணம் செய்யும் பொழுது) கல்தேமுல்ல வீதியில் வலது பக்கம் திரும்பி 900 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது புத்த பிரதிமா இடது பக்கம் திரும்பி 250 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது கத்தோலிக்க பிரதிமா 2 ஆவது ஒழுங்கையில் வலது பக்கம் திரும்ப 150 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது, சுற்று வட்டாரத்தில் இடது பக்கத்தில் விடயமுடைய காணி அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பிஎல்சி பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் ரூபா 2.5%;
(4) உள்ளூராட்சி மன்ற வரி 1%;

(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றைய செலவுகள் 100%;
(6) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;
(7) நொத்தாரிசு மற்றும் ஏனைய கட்டணம் ரூபா 3,500.00.

சட்டப்பிரிவு திணைக்களம், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி, இல. 64, காலி வீதி, கொழும்பு -03.
தொலைபேசி இலக்கம் : 011- 2374100.

எல்.பி. சேனாநாயக்க ,
உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர், கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட நீதிமன்றம்,
அரசாங்க மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 7/1/10,
1 ஆவது மாடி,
சுப்பர் மார்க்கட் கட்டிடத் தொகுதி
கொழும்பு -08,

தொலைபேசி இலக்கம் : 011- 2396520.

06- 195

---

**யூனியன் பேங்க் ஒஃ ப் கொழும்பு பிஎல்சி**

**பகிரங்க ஏல விற்பனை**

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் )
09 ஆவது சிறப்புச் சட்டப்படி ஏல விற்பனை விளம்பரம்

ஆதன இடாப்பு

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், வடக்கு மாத்தளை , வகபனஹ பல்லேசிய பத்துவ, தம்புல்ல பிரதேச சபை எல்லையினுள், தம்புல்ல பிரதேச செயலாளர் பிரிவில், தம்புள்ள நகரம் கிராம அலுவலர் பிரிவில், தம்புல்ல கிராமத்தில் பாதோணியவில் அமைந்துள்ள "வெட்டடச்சியாவ கடுபொத, வெட்டடச்சியாவ மற்றும் அடுபெதியாய" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஏ.எம். அனுரரத்ன அவர்களால் 2006.05.02 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 2011.08.01 ஆந் திகதி தயாரித்த இல. 3247/ B மற்றும் என்ற வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட லொட் 7B என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதியின் விஸ்தீரணம்: (39.5பேர்ச்.)

விசாலமுடைய காணித்துண்டோடு மற்றும் அதனுள் அமைந்துள்ள மண், கட்டிடம். இலைகு ழை, பயிர்ச்செய்கை, பழங்கள் ஆகிய அனைத்தும் .இந்தக் காணி மாத்தளை காணிப்பதிவு செய்யும் அலுவலகத்தில் L 79/ 108 இருமடிப்புத் தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணி "வெட்டடச்சியாவ கடுபொத, வெட்டடச்சியாவ மற்றும் அடுபெதியாய" என்ற பெயருடைய காணிப் பகுதியான மேற்குறித்த முதற் காணி கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், வடக்கு மாத்தளை வகபனஹ பல்லேசிய பத்துவ, தம்புல்ல பிரதேச சபை எல்லையினுள் தம்புல்ல பிரதேச செயலாளர் பிரிவில் தம்புள்ள கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதோடு. விஸ்தீரணம்:(06ஏ.01றூ.25.3பே.) விசாலமுடைய காணித்துண்டோடு மற்றும் அதனுள் அமைந்துள்ள மண், கட்டிடம். இலைகுலை, பயிர்ச்செய்கை, பழங்கள் ஆகிய அனைத்தும் . இந்தக் காணி மாத்தளை காணிப்பதிவு செய்யும் அலுவலகத்தில் D 557/ 146 மற்றும் D 557/ 167 இருமடிப்புத் தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் தம்புள்ள. அநுராதபுர வீதி, இல. 368/ 1 என்ற முகவரியில் வசிக்கும் பாதுக்ககே தோன் ஷலனி அனுருத்திகா குணவர்தன ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 836213890V) (இதன் பின்னர் "கடனாளி" என அழைக்கப்படும்) அவர்களால் கம்பனி பதிவு இலக்கம் PB 676 PQ உள்ள யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பிஎல்சி ( இதன் பின்னர் "யூனியன் பேங்க் " என அழைக்கப்படும் ) மேற்குறித்த கடனாளி அவர்களால் மேற்குறித்த ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட காணி சம்பந்தமாக, தம்புல்ல பிரசித்த நொத்தாரிசு ஜயம்பதி ரத்னதிவாகர அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 11442 மற்றும் 2018. 05.22 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப ஈட்டு முறியையும் எழுதி கையொப்பமிட்டு மேற்குறித்த கடன் வசதிகளினால் ( இதன் பின்னர் "கடன் வசதிகள்" என அழைக்கப்படும் ) யூனியன் பேங்க் மூலம் அறவிடப்பட வேண்டிய மேற்குறித்த கடன்வசதிகள் மற்றும் அதன் மீதுள்ள வட்டிகள் மீள செலுத்துவதற்காக, பிணையாக வைத்து, மேற்குறித்த முதலாவது மற்றும் இரண்டாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட அசையா சொத்துக்களை அடகு வைத்து பிணையாக வைத்துள்ளதாலும், யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பிஎல்சி மூலம் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் ,

மேல் சொல்லப்பட்ட காணிகளை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு.

**காணிக்குப் செல்லும் விதம்.-** தம்புல்ல நகர மத்தியிலிருந்து அநுராதபுர வீதி ஊடாக 50 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது குறுக்கு வீதியில் வலது பக்கம் திரும்பி 400 மீற்றர் பிரயாணம் செய்யும் பொழுது, விடயமுடைய காணி இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பிஎல்சி பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் ரூபா 2.5%;
(4) உள்ளூராட்சி மன்ற வரி 1%;
(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றைய செலவுகள் 100%;
(6) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா1,500.00;
(7) நொத்தாரிசு மற்றும் ஏனைய கட்டணம் ரூபா 3,500.00.

சட்டப்பிரிவு திணைக்களம், யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பிஎல்சி, இல. 64, காலி வீதி, கொழும்பு -03.
தொலைபேசி இலக்கம் : 011- 2374100.

எல்.பி. சேனாநாயக்க ,
உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர், கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட நீதிமன்றம்,
அரசாங்க மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 7/1/10,
1 ஆவது மாடி,
சுப்பர் மார்க்கட் கட்டிடத் தொகுதி,
பொரல்ல,
கொழும்பு -08,

தொலைபேசி இலக்கம் : 011- 2396520.

06- 196

## யூனியன் பேங்க் ஒஃ ப் கொழும்பு பிஎல்சி

### பகிரங்க பொது ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சியின் பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு நீர்கொழும்பு, டொன் பொஸ்கோ மாவத்தை, இல.21, என்ற முகவரியில் "ஜி என்ட் ஜி இம்மனென்ட் லங்கா" ( வணிகப் பதிவு இல.W.V. 8713, 2010.06.03 ஆந் திகதியிடப்பட்ட) என்ற பாணி மற்றும் நிறுவனத்தின் பெயரில் ஒரே உரிமையாளரின் கீழ் வணிகத்தை நடத்தும் ( இனிமேல் "கடமையாளர் என்று குறிப்பிடப்படுகிறது) அதே முகவரியில் வசிக்கும் வர்ணகுலசூரிய டொன் ஷேன் கவின் (தே.அ.அ.இல. 870701683V ஐ உடையவர்) என்பவர் 'கடப்பாட்டாளர்" என்ற வகையில் பணம் செலுத்தத் தவறியுள்ளார் ஆதலால் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சீ என்ற பெயரில் பிரசித்த நொத்தாரிசு ஜி.ஏ.எல். பீ. தம்மிக்க சில்வா என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2011.08.09 ஆந் திகதி இடப்பட்ட 1530 ஆம் இலக்க முதன்மையான ஈட்டு முறி , 2017.04.17 ஆந் திகதி இடப்பட்ட 2513 ஆம் இலக்க இரண்டாம் நிலை ஈட்டு முறி, 2022.08.23 ஆந் திகதி இடப்பட்ட 3047 ஆம் இலக்க மூன்றாம் நிலை ஈட்டு முறி, 2014.12.24 ஆந் திகதி இடப்பட்ட 2117 ஆம் இலக்க முதல் அட்டவணையில் உள்ள மற்றும் முதன்மையான ஈட்டு முறி, 2017.04.17 ஆந் திகதி இடப்பட்ட 2515ஆம் இலக்க இரண்டாம் நிலை ஈட்டு முறி, 2017.04.17 ஆந் திகதி இடப்பட்ட 2517 ஆம் இலக்க இரண்டாவது அட்டவணையில் உள்ள மற்றும் முதன்மையான ஈட்டு முறி , 2021.09.07 ஆந் திகதி இடப்பட்ட 2971 ஆம் இலக்க இரண்டாம் நிலை ஈட்டு முறி, 2023.05.22 ஆந் திகதி இடப்பட்ட 3119 ஆம் இலக்க மூன்றாம் நிலை ஈட்டு முறி, 2018.02.16 ஆந் திகதி இடப்பட்ட 2637ஆம் இலக்க மூன்றாம் அட்டவணையில் உள்ள மற்றும் முதன்மையான ஈட்டு முறி , நான்காவது அட்டவணையில் இன்னும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள மற்றும் முதலாவது, இரண்டாவது. மூன்றாவது மற்றும் நான்காவது அட்டவணைகளில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது பத்திரமாக அடமானம் வைக்கப்பட்டதன் மூலம் யூனியன் பேங்க் ஒஃப் கொழும்பு பிஎல்சி எனக்கு வழங்கிய அதிகாரத்தின்படி அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது

**1 ஆவது ஏலம்**

**முதலாவது அட்டவணை**

மேல் மாகாணத்தின் , கம்பஹா மாவட்டத்தில், நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்குள், நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவிற்குள். இல. 73ஏ இன் கிராம அலுவலர் பிரிவிற்குள், குடாபாடுவையில் அமைந்துள்ள "திம்புலுகஹவத்த" என்று அழைக்கப்படும் காணி. உரிமம் பெற்ற நில அளவையாளர் டீ.எம்.எச். தம்மிக்க பண்டார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007, யூன் மாதம் 24 ஆந் திகதி இடப்பட்ட 1076 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அளவீடு செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு பதினேழு தசம் ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.17.9பே.) மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அதில் நிற்கும் அனைத்தும் அடங்களான காணி. நீர்கொழும்பு நிலப் பதிவேட்டில் தொகுதி/ பக்கம் ஏ 271/ 185 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.எம். திசாநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996, செத்தெம்பர் 29 ஆந் திகதி இடப்பட்ட 3955 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 01 (10 அடி அகலம் ) முழுவதும் சாலை முன்பதிவைப் பயன்படுத்துவதற்கான உரிமையுடன்

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.-** நீர்கொழும்பு பெரியமுல்ல சந்தியிலிருந்து அட்னிவ்ஸ் வீதியில் சுமார் 750 மீற்றர் தூரம் பாலம் வரை சென்று மயான வீதியில் இன்னும் சுமார் 200 மீற்றர் தூரம் வரை சென்று வலதுபுறம் திரும்பி டொன் பொஸ்கோ மாவத்தைக்கு சென்று டொன்பொஸ்கோ பிரதான வாயிலுக்கு சுமார் 300 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு ராணி மாவத்தையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்று இடது புறம் திரும்பி 50 மீற்றர் தூரம் சென்று பிறகு வலது புறத்தில் இந்த சொத்தை அடையலாம்.

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 22ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**2 ஆவது ஏலம்**

**இரண்டாவது அட்டவணை**

மேல் மாகாணத்தின் , கம்பஹா மாவட்டத்தில், நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்குள், மாநகர சபை எல்லைக்குள், நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவிற்குள், இல. 73 ஏ இன் கிராம அலுவலர் பிரிவிற்குள், பெரேரா பிளேஸ், குடாபாடுவவில் அமைந்துள்ள பனமரத்தடித்தோட்டம் மற்றும் பங்குமரத்தடித்தோட்டம் என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ்.எஸ். பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.07.25 ஆந் திகதி இடப்பட்ட 6813/ 1 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அளவீடு செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு ஆறு தசம் எட்டு ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.6.85பே.) அல்லது 0.01732 ஹெக்டயார் மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அதில் நிற்கும் அனைத்தும் அடங்கலான காணி. நீர்கொழும்பு காணிப்பதிவேட்டில் தொகுதி / பக்கம் ஜி 117/ 6 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.-** நீர்கொழும்பு பெரியமுல்ல சந்தியிலிருந்து அட்னிவ்ஸ் வீதியில் சுமார் 500 மீற்றர் தூரம் சென்று வலது புறம் உள்ள மயான வீதியை அடைந்து, அதன் வழியாக சுமார் 400 மீற்றர் தூரம் சென்று, இடது புறம் திரும்பி பெரேரா பிளேசுக்குச் சென்று 75 மீற்றர் வரை சென்ற பிறகு இடது புறம் இந்தச் சொத்தை அடையலாம்.

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 22ஆந் திகதி மு.ப. 10.20 மணிக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**3 ஆவது ஏலம்**

**மூன்றாவது அட்டவணை**

மேல் மாகாணத்தின் , கம்பஹா மாவட்டத்தில், நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்குள், மாநகர சபை எல்லைக்குள், நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவிற்குள், இல. 73 இன் கிராம அலுவலர் பிரிவிற்குள், ஏத்துகல கிராமத்தில் கதுருகஹவத்த கோரகஹவத்த அல்லது கதுருகஹவத்த மதங்கஹவத்த மற்றும் கோரகஹவத்த அல்லது மடங்கஹவத்த கொஸ்கஹவத்த நவமரத்தடிதோட்டம தங்கஹவத்த கொங்கஹவத்த கொஸ்கஹவத்த அல்லது வீரகஹவத்த கொங்கஹவத்த என்று அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ்.எஸ். பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011,யூன் மாதம் 10 ஆந் திகதி இடப்பட்ட6800/1 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அளவீடு செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு இருபத்தொன்பது தசம் ஏழு பூச்சியம் பேர்ச் (0ஏ.0றூ. 29.70பே.) மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அதில் நிற்கும் அனைத்தும் அடங்கலான காணி. நீர்கொழும்பு காணிப்பதிவேட்டில் தொகுதி / பக்கம் ஜி 177/ 119 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.-** நீர்கொழும்பு பெரியமுல்ல சந்தியிலிருந்து அட்னிவ்ஸ் வீதியில் சுமார்750 மீற்றர் தூரம் பாலம் வரை சென்று மயான வீதியில் திரும்பி இன்னும் சுமார் 200 மீற்றர் தூரம் வரை சென்று வலதுபுறம் திரும்பி டொன் பொஸ்கோ மாவத்தைக்குச் சென்று டொன் பொஸ்கோ பிரதான வாயிலுக்கு சுமார் 300 மீற்றர் தூரம் வரை சென்று பிறகு ராணி மாவத்தையில் சுமார் 150 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு அதே வீதியில் இடது புறத்தில் இந்தச் சொத்தை அடையலாம்.

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 22ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**4 ஆவது ஏலம்**

**நான்காவது அட்டவணை**

மேல் மாகாணத்தின் , கம்பஹா மாவட்டத்தில், அளுத்குரு கோரளையின் துனகஹ பத்துவே, நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்குள் மாநகர சபை எல்லைக்குள், நீர்கொழும்பு பிரதேச செயலக பிரிவிற்குள், இல. 74, தளுவகொடுவ கிராம அலுவலர் பிரிவிற்குள், தலுவகொடுவையில் அமைந்துள்ள சுபசாதக மாவத்தை வரி மதிப்பீட்டு இலக்கம் 102/ 2 ஐக் கொண்ட "சின்ன மோல் " என்று அழைக்கப்படும் காணி. உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஜே.எம்.ஜி. டயஸ். என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.07.22 ஆந் திகதி இடப்பட்ட 5583 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டு அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அளவீ செய்யப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு முப்பத்தொன்று தசம் ஆறு ஒன்பது பேர்ச் ( 0ஏ.0றூ. 31.69பே.) அல்லது 0.0802 ஹெக்டயார். மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அதில் நிற்கும் அனைத்தும் அடங்கலான காணி. மேலும் நீர்கொழும்பு காணிப்பதிவேட்டில் தொகுதி / பக்கம் 227/ 105 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.-** தளுவகொடுவ சந்தியில் இருந்து கொழும்பு வீதியில் நீர்கொழும்பை நோக்கிச் சிறிது தூரம் சென்ற பிறகு இடதுபுறத்திலுள்ள சுபசாதக மாவத்தை ஊடாக சுமார் 650 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு வலது பக்கத்திலுள்ள தனியார் வீதியில் 50 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு இந்த வீதியின் கடைசியில் இடது பக்கத்தில் இந்த விடயத்துக்கான சொத்தை அடையலாம்.

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 22ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் நூற்றுக்கு பத்து வீதம் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி நூற்றுக்கு ஒரு வீதம் 1%;
(3) ஏலதாரரின் தரகுப்பணம் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 5,000 ரூபா;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 3,000 ரூபா;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரம் மற்றும் இதரச் செலவுகள் 100%.

கொள்வனவு விலையின் 90% வீதத்தையும் மிகுதி இலங்கை அரசினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் வங்கி பிஎல்சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப்பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி ஏனைய ஆவணங்கள் பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ் குறிப்பிடப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ளவும் .
சட்டப்பிரிவு, கொழும்பு யூனியன் வங்கி பிஎல்சி, இலக்கம் 64, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கம் : 011- 2374100.

சந்திமா பிரியதர்ஷனி கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொடை,
ஹோமாகம.

தொலைபேசி இலக்கம் : 071- 4318252, 011-2173282.

06- 222